Registered as a Newspaper

அழகிய கலை நயம் மிக்க
புதுமையான
22 KT தங்க
நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

உதயன்

விலை ரூ. 1/-

பெண்மைக்கு
பெருகேற்றும் இளமைக்கு
எழிலூட்டும் தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்
தொலைபேசி: 23628

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

கடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 19 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 02 (05-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 299

மன்னார் கடலில் வைத்து

அகதிகள் படகுகள் மீது கடற்படை தாக்குதல்

இரு வேறு சம்பவங்களில் இரண்டு பேர் உயிரிழந்தனர்

— உதயன் வல்வைச் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, நவ. 5

மன்னார் கடல் பிரதேசத்தில் வைத்து அகதிகள் பயணம் செய்த மூன்று படகுகள் மீது கடற்படையினர் தாக்குதல்கள் நடத்தியது குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன

இரு விசைப் படகுகள் அகதிகளை ஏற்றிக்கொண்டு இந்தியா நோக்கிச் சென்றது. அதன்மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் உயிரிழந்தார்.

தென் இந்தியாவில் இருந்து அகதிகள் வந்த இரண்டாவது படகின் மீதும் கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். அந்தப் படகில் வந்த இளைஞர் ஒருவன் கடலிற்குள் குதித்து நீரில் மூழ்கி மரணமானார்.

இந்த இரு வேறு சம்பவங்களும் மன்னார் கடற்பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

சம்பவம் ஒன்று

தென் இந்தியாவுக்கு அகதிகளை ஏற்றிச்சென்ற மோட்டார் படகு மீது மன்னார்பேசாலைக்கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ஒருவர் உயிரிழந்தார்.

ஆண்கள், பெண்கள் உட்பட ஏனைய 56 அகதிகளும் தள்ளாடி முகாமில் ஒப்படைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பிடிபட்டுத் தப்பிவந்த வல்வெட்டித்துறை வாசியான செ. இராமதாஸ் (பவா) என்பவர் மேற்கண்ட தகவல்களை உதயன் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது—

இரண்டு விசைப் படகுகளில் நான் உட்பட 56 அகதிகள் தென் இந்தியா நோக்கிச் சென்றுகொண்டிருந்தோம்.

மன்னார் கடலில் ரோந்து புரிந்த கடற்படையினர் எமது படகுகளை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

அதனால் படகுகளின்

(4ஆம் பக்கம் பார்க்க)

பாடசாலை தவணை நாட்கள்

யாழ்ப்பாணம், நவ. 5

1987ஆம் ஆண்டுக்கான பாடசாலை நாட்கள் கொண்ட கலண்டர் வெளியிடப்பட்டுள்ளது.

முதலாம் தவணை 5-1-87 இல் ஆரம்பமாகி 3-4-87இல் முடிவடையும்.

இரண்டாம் தவணை 4-5-87 இல் ஆரம்பமாகி 24-7-87இல்முடிவடையும்.

மூன்றாம் தவணை 25-8-87 இல் ஆரம்பமாகி 3-12-87 இல்முடி

(4ஆம் பக்கம் பார்க்க)

டிக்ஸிற் தகவல்

அரசு திட்டத்தை போராளிகள் முற்றாக நிராகரிக்கவில்லை

கொழும்பு, நவ. 5

இலங்கை அரசின் யோசனைகளில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வரக்கூடியதான திருத்தங்களைப் போராளி அமைப்புக்கள் சமர்ப்பித்துள்ளன.

இப்படி இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் கடந்த திங்கள் இரவு ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துத் தெரிவித்தார்.

''இலங்கை அரசின் யோசனைகளை தமிழ்ப்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஆதீனத்தில் இன்று

யாழ்ப்பாணம் நவ. 5

நல்லை ஆதீனத்தில் கந்த சஷ்டி விழாவின் 4 ஆம் நாள் நிகழ்ச்சி இன்று நடைபெறும்.

''குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்று'' என்ற தலைப்பில் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் பேசுவார். (இ-எ)



ஷெல் தாக்குதலால் சேதம் அடைந்த யாழ். பெரியாஸ்பத்திரிக் கட்டடம் ஒன்றை அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழுத் தலைவர் டாக்டர் ஸ்ரான்மோர் டீ அல்விஸுக்கு யாழ். ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் காட்டுவதை மேலே உள்ள படத்தில் காணலாம். டாக்டர் எஸ். கிருஷ்ணராசாவும் அருகில் காணப்படுகிறார். தூதுக் குழுவினர் யாழ். ஆஸ்பத்திரிக்கு வருகை தந்த பொழுது யாழ். பல்கலைகழக மருத்துவ பீட மாணவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கித் தமது நிலைப்பாட்டை எடுத்துக் காட்டுவதைக் கீழே உள்ள படத்தில் காணலாம். (இ-9)

பயங்கரச் சத்தத்துடன்

இரவு நேரத்தில் ஷெல் தாக்குதல்

மக்கள் வங்கி அலுவலகம் மற்றும் பல கடைகள் சேதம்

யாழ்ப்பாணம், நவம்பர். 5

யாழ்ப்பாண நகரில் திங்கட்கிழமை பின்னிரவு சுமார் 2.30 மணி தொடக்கம் பயங்கரச் சத்தத்துடன் கோட்டை இராணுவ முகாமில் இருந்து பல தடவைகள் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன-

நித்திரையில் இருந்த நகர மக்கள் துடித்துப் பதைத்து எழும்பி பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று.

அன்றைய இரவுத் தாக்குதலில் நவீன சந்தையில் உள்ள மக்கள் வங்கிக்கிளை அலுவலகம், மற்றும் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள எஸ். வி. முருகேசு ஸ்தாபனம், வை. சி. சி. கு. கடை, றொலக்ஸ் ஹோட்டல் என்பன குண்டு விழுந்து பெரும் சேதத்துக்குள்ளாகின.

ஷெல் தாக்குதல்களினால் நால்வர் காயம் அடைந்தனர்.

திங்கட்கிழமை பின்னிரவு சுமார் 2-30 மணி தொடக்கம் யாழ் கோட்டை முகாமில் இருந்து நகரத்தைக்கலக்கும் விதத்தில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்திடீர்த் தாக்குதல் காரணமாக நவீன சந்தைக் கட்டடத்தில் உள்ள மக்கள் வங்கிக்கிளையில் உள்ள பல தஸ்தாவேஜுகள் எரிந்து போயின. இரும்பு அலுமாரிகளும் எரிந்து உருக்குலைந்துள்ளன.

மூன்று வருடங்களுக்கு முற்பட்ட வங்கித் தஸ்தாவேஜுகள் பல எரிந்து நாசமாயின.

தீயணைப்பு

மாநகரசபை தீயணைக்கும் படையினர் செவ்வாய் அதிகாலை 3.30 மணி அளவில் இருந்து தீயுடன் போராடி மக்கள் வங்கி அலுவலகத்தில் பிடித்த தீயை அணைத்தனர்.

சேதமடைந்த நவீன சந்தைக் கட்டடத்தையும், மக்கள் வங்கிக்கிளை ஸ்தாபனத்தையும் யாழ் மாநரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் நேரில் சென்று பார்வையிட்டார்.

வை. சி. சி. கு. கடைக்குள் படுத்திருந்தவர்களில் நான்கு பேர் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்

(4ஆம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை மீனவர் பலி

பருத்தித்துறை, நவ. 5

பருத்தித்துறை கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வயோதிபர் ஒருவர் சிப்பாய்கள் சுட்டதில் பலியானார்.

இன்பருட்டி கிராமத்தைச் சேர்ந்த எஸ். குணம் (55 வயது) என்பவரே மரணமானவராவார்.

கடந்த திங்கட்கிழமை காலை 11 மணி அளவில் இவர் மீன் பிடித்துக் கொண்டிருந்த வள்ளம் கழிக் காற்றினால் இழுத்துச் செல்லப்பட்டது.

அப்பொழுது பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாமில் இருந்து சிப்பாய்

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

உப்பிடி எத்தினை தவிர்ப்புப் பிரதேசங்கள், சேர்ப்புப் பிரதேசங்கள்...! எல்லாம் பழைய விஷயம் காணும்...!!

எது வந்தாலும் ஷெல் வாறது நிக்குமோ எண்டது தான் கேள்வி...!

யாழ். பெரியாஸ்பத்திரி பகுதி சண்டைத் தவிர்ப்பு பிரதேசம்

வைத்திய அதிகாரிகள் சங்கம் முயலும்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ் பெரியாஸ்பத்திரியையும் அதனைச் சூழ்ந்த பகுதியையும் சண்டைத் தவிர்ப்புப் பிரதேசமாக இரு சாராரும் ஏற்கின்ற நிலைப்பாட்டை உருவாக்க அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் முயற்சிகளை மேற்கொள்ளும்.

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் சங்கத் தலைவர் டாக்டர் ஸ்ரான்மோர் டீ அல்விஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இம்மாநாட்டில் தூதுக் குழுவினருடன் டாக்டர் ச. சிவகுமார், டாக்டர் ஜெகா பசுபதி ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

டாக்டர் ஸ்ரான்மோர் டீ அல்விஸ் தொடர்ந்து கூறியதாவது :-

ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிய வந்திருக்கிறோம்.

இங்குள்ள வைத்திய அதிகாரிகள் தாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைக் காலத்துக்குக் காலம் எடுத்துச்சொல்லியிருந்தனர்.

இப்பிரச்சினையை மிகவும் குறுகிய காலத்தில் தீர்த்துவைக்க விரும்புகிறோம். எவ்வித தடையுமின்றி இடையூறு இல்லாமல் வைத்தியர்கள் தமது நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் உரிமை ஓர் அடிப்படை உரிமை

(4-ஆம் பக்கம் பார்க்க)

கோட்டை அதிகாரிகள் வரவேற்றதாகத் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ் ஆஸ்பத்திரி பிரதேசத்தை சண்டைத் தவிர்ப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்துவது என்ற அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யோசனையை யாழ் கோட்டை இராணுவ முகாம் அதிகாரிகள் வரவேற்றனர்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கப் பொதுச் செயலாளர் டாக்டர் ரத்னப்பிரியா இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

சங்கத் தூதுக் குழு அதன் தலைவர் டாக்டர் ஸ்ரான்மோர் டி அல்விஸ் தலைமையில் நேற்றுப் பிற்பகல் யாழ் கோட்

(4ஆம் பக்கம் பார்க்க)

கடத்தல் படகு மீது கடற்படை தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 5

காரைநகரில் நேற்று கடத்தல் படகு எனச் சந்தேகிக்கப்படும் படகு ஒன்றின் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தி படகையும் கடத்தல் பொருள்களையும் கைப்பற்றியதாக அறியவருகிறது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்று 11 மணியளவில் மாதகல் கடற்பகுதியில் சென்று கொண்டிருந்ததாகக் கூறப்படும் மூன்று படகுகளை கடற்படையினர் துரத்திச் சென்றனர்.

மூன்று படகுகளும் வெவ்வேறு திசைகளில் ஓடிக் கொண்டிருந்தன. படகுகள் மீது கடற்படைப் படகில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் காரணமாக ஒரு படகு சேதமடைந்தது.

படகில் இருந்தவர்கள் படகைக் கைவிட்டு கடலில் குதித்து நீந்தித் தப்பினர்.

மற்றைய இரண்டு படகுகளும் தப்பிவிட்டன.

சேதம் அடைந்த படகுக்கு அண்மையில் வந்த கடற்படையினர் படகையும், கடத்தல் பொருள்களையும் தம்முடன் எடுத்துச் சென்றனர் என அறியவருகிறது. (இ-10)

நாளை மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகள், கல்லூரிகள் அனைத்தும் கலந்து கொள்ளும் மாபெரும் மௌன ஊர்வலம் ஒன்று நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மாணவ தலைவன் பொ. விபுலானந்தன் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானதைக் கண்டித்தும், கோட்டை இராணுவ முகாம் அகற்றப்படவேண்டும் எனக் கோரியுமே இந்த ஊர்வலம் மத்திய கல்லூரி மாணவர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நாளைக் காலை 9 மணி அளவில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் இருந்து ஊர்வலம் ஆரம்பமாகும்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இருந்து ஆரம்பித்து பருத்தித்துறை வீதியூடாகச் சென்று யாழ். கல்வித் திணைக்களத்தை ஊர்வலம் அடையும்.

மாணவர்களால் தயாரிக்கப்பட்ட மகஜர் ஒன்றும் கல்விப் பணிப்பாளரிடம் மாணவ பிரதிநிதிகளினால் கையளிக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டில் இன்று துக்க தினம்

பாடசாலைகள் நடைபெறா ஏனையவை வழமைபோல்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ் குடாநாடு முழுவதும் இன்று துக்க தினம் அனுஷ்டிக்குமாறு யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் இன்று நடைபெற மாட்டா,

30 ஆம் திகதி யாழ் மத்திய கல்லூரி மாணவர் தலைவர் பொ. விபுலானந்தன் பாடசாலை வேளையில் அரச சிப்பாய்களினால் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாகவே இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கறுப்புப் பட்டி கறுப்புக் கொடி

இதேவேளை அரச ஊழியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கடமைக்குச் செல்லவேண்டும் என்றும் வர்த்தக நிறுவனங்களிலும் தனியார் அரச வாகனங்களிலும் கறுப்புக் கொடிகளைப் பறக்க விடுமாறும் மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மாணவர்கள் முன்னர்

(4ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
05-11-1986
புதன்கிழமை
சுபநேரம்:
4.34 முதல் 6.04 வரை
ராகுகாலம்:
12.04 முதல் 1.34 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும் சதுர்த்தி விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளையாட்டரங்கு

ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 5 மாணவர் முன்னணி நடத்தும் பாடசாலை களுக்கிடையிலானஉதை பந்தாட்டப் போட்டியில் சுன்னுகம் ஸ்கந்தவரோ தயா கல்லூரி வெற்றி பெற்றது

3ஆம் திகதி நடை பெற்ற 'ஆ' பிரிவு கால் இறுதி ஆட்டத்தில் சுன் னுகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மகா வித்தி யாலயம் மோதியது.

இடைவேளைவரை இரு கல்லூரிகளும் கோல் எது வும் போடவில்லை.

ஆட்ட இறுதி நேரத் தில் ஸ்கந்தா அடுத் தடுத்து 5 நிமிடங்களில் 3 கோல்களைப் போட்டு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை வென்று அரை இறுதி ஆட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டி சுன்னுகம் ஸ்கந்தவரோதயா கல் லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இன்று 5ஆம் திகதி கொக்குவில் இந்துக் கல் லூரியை எதிர்த்து யாழ் சென்பற்றிக்ஸ் கல்லூரி மோதுகிறது. (இ)

புத்தளத்தில் ராணுவ முகாம்

சிப்பாய்கள் துண்டுப் பிரசுரம்

கொழும்பு, நவ. 5

புத்தளம் பகுதியில் பெரிய இராணுவமுகாம் ஒன்றை நிறுவ பாது காப்பு வட்டாரங்கள் நடவடிக்கை எடுத்து உள்ளன.

இதற்கு முன்னோடி யாக பாதுகாப்பு வட் டாரங்கள் அப்பகுதியில் தமிழில் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின் றன.

''தமிழ், முஸ்லிம் மக்களே! இப்பகுதியில் தீவிரவாதிகள் நடமாடு கின்றனர். அவர்களைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக் கை எடுக்க வேண்டியுள் ளது. உங்கள் பிள்ளைகளை எச்சரிக்கையாக வைத்து இருங்கள்.

இப்படி துண்டுப் பிர சுரத்தில் கூறப்பட்டுள் ளது. (இ-ஐ-எ)

யாழ் வந்த லொறியில் 'கொள்ளை'

கொழும்பு, நவ. 5

யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த லொறி ஒன்று கடந்த வெள்ளிக் கிழமை இரவு மிரிகமவில் வைத்துக் கடத்தப்பட் டது.

லொறியில் இருந்த 2½ லட்சம் ரூபா பெறு மதியான பால்மா உண வுப் பொருள்களைக் கொள்ளை இட்ட பின் னர், லொறி மீண்டும் சாரதியிடம் ஒப்படைக் கப்பட்டது.

ஹைஏஸ் வானில் வந்த ஒரு கோஷ்டியினர் இக் கொள்ளையை நடத்தி னர். (ஐ-எ)

மக்கள் முகம்

பாரதி சனசமூக நிலையம்

வேலணை நவ 5

வேலணை மேற்கு பாரதி சனசமூக நிலையத்தின்வரு டாந்தப் பொதுக் கூட் டம்சனசமூக நிலையத் தலை வர் திரு.செ. குணரெத்தி னம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடை பெற்றது.

பின் வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு. செ. குணரெத்தினம் தலைவர் திரு.செ.அரசரெத்தினம் உபதலைவர் திரு ச.துரை ஐயா, செயலாளர் திரு. பா.கணேசலிங்கம், பொ குளாளர் திரு செ.சுப்பி ரமணியம், கணக்குப்பரி சோதகர். திரு ந தவச் செல்வம்.

திரு க.சுந்தரம், திரு செ. இராசதுரை, திரு.க மாணிக்கம், திரு. கு. ரகு ணதாப் ஆகியோர் நிர் வாக சபை உறுப்பினர்க ளாகத் தெரிவு செய்யப்பட் டுள்ளனர். (இ-167)

முதலிடம்

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ் இந்து மகளிர் கல் லூரியில் யாழ் மாவட்டப் பாடசாலை களுக்கிடையே நடை பெற்ற இசை நடன நாடகப் போட்டிகளில் கைதடி நாவற்குழி அர சினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆரம்ப பிரிவு புதிய ஆக்க இசைப் போட்டியிலும், ஆரம்ப பிரிவு புதிய ஆக்க நட னப் போட்டியிலும் முத லாம் இடத்தைப் பெற் றுள்ளது. (இ

ஓய்வும் நியமனமும்

புங்குடுதீவு, நவ. 4

புங்குடுதீவு திருநாவுக் கரசு வித்தியாலய அதி ராகக் கடமையாற்றிய திரு. செ. இலகுப்பிள்ளை தமது சேவையினின்றும் அண்மையில் ஓய்வு பெற் றார். இவரது இடத்திற் குத் திருமதி த. நியாக ராசா பதில் அதிபராக நியமிக்கப்பட்டார்.

(இ-131)

ஆலோசனைக் குழு

ஊர்காவற்றுறை, நவ. 5

ஊர்காவற்றுறை அபி விருத்திச் சபை உப அலு வலகத்தின் கீழ் இயங் கும் பொதுசன நூல் நிலையத்திற்கான ஆலோ சனைக் குழு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி உப அலுவல கத்தின் அதிகாரமளிக் கப்பட்ட உத்தியோகத் தர் திரு. சார்ள்ஸ் பொன்கலன் இதுவிடய மான முயற்சியில் ஈடுபட் டுள்ளார். (இ-16)

விருப்புகள்

SCIENCE CENTRE KARAVEDDY

க. பொ. த (உயர்) 87 ஆகஸ்ட் விஞ்ஞான முறையில் அலகு ரீதி யான தரித மீட்டல் வகுப்பு. விஞ்ஞான பாடங்கள் மட்டும். ஆரம்பம்– 7-11-1986

தாயைத் தேடுகிறார் தனயன்

திருகோணமலையை வசிப்பிடமாகக்கொண்ட வரும் காலஞ் சென்ற முத்தையா கந்தையர் என்பவரின் மனைவியு மான திருமதி. லட்சுமி என்பவரை பல வருடங் களாகப் பிரிந்திருக்கும் அவரது இளைய மகன் செல்வம் தேடுகிறார்.

தற்போது முருகேசு என்பவரை நன்கு அறிந் தவரான இவர் அண்மை யில் வடக்கு நோக்கி அகதிகளாக வந்ததாக வும், மீண்டும் இவர் திரு மலை நோக்கி சென்றிருப் பதாகவும் தெரியவரு கிறது.

இவரது இளைய சகோ தரன் திரு. சுப்பையா செல்லத்துரை என்பவர் கொழும்பு நகரில் (அளுத் மாவத்தை) வசிக்கின் றார். சிறுவயதிலேயே தாயைப் பிரிந்து தம் மாமனுருடனும் அண் ணன்மாருடனும் வாழ்ந் ததாக இந்த மகன் தெரி விக்கின்றார்.

எனவே மேற்படி திரு மதி லட்சுமி அவர்கள் அல்லது இவர்கள்பற்றி விபரம் அறிந்தவர்கள் கீழ்வரும் விலாசங்களு டன் உடன் தொடர்பு கொள்ளும்படி தயவாக வேண்டப்படுகின்றனர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:—

1. பங்குத்தந்தை, புனித அந்தோனியார், ஆலயம், சுன்னுகம்.
2. சந்திரசேகரம், (பப்பாயர்) சிறிமுருகன் கபே, மாவிட்டபுரம்.

ஹோம் கேப்பிங் என்ஜினியர்ஸ். குரும்பசிட்டி, தெல்லிப்பழை.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

கிளிநொச்சிப்பகுதியில் இரு கிராமசேவகர் பிரிவுகள்

கிளிநொச்சி, நவ. 5

கிளிநொச்சிக் கிராம சேவகர் பிரிவை இரண் டாகவகுத்து இரு கிராம சேவகர்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன்.

கிளிநொச்சி கிராம சேவகர் பிரச்சினை குறி த்து எடுத்துரைத்த கிளி நொச்சி கிராம அபிவி ருத்திச் சங்கங்களின் ஒன் றியம், பிரசைகள் குழு ஆகியனவற்றிடம் கிளி நொச்சி மாவட்ட அர சாங்க அதிபர் திரு. ஏ. ஜே. செந்தில்நாதன் மேற்கண்டவாறு கூறி னர்.

இச் சந்திப்பின் போது கிளிநொச்சி கிராம அபி விருத்திச் சங்கங்களின் ஒன்றியத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. என். வேலாயுதம் அதன் உப செயலாளர் திரு. எஸ். திருக்கேதீஸ்வரன் ஆகியோரும் பிரசைகள் குழுவின் சார்பில் அதன் பொருளாளர் திரு.எஸ். ஏவராஜசிங்கம், உப செயலாளர் ஏ. பஞ்ச லிங்கம் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

அரசாங்க அதிபர் மேலும் இதுபற்றி எடுத் துரைக்கையில்;– கிளி நொச்சிக் கிராம சேவகர் பிரிவை நான்காக பிரிக்க எனக்கு முன் இருந்த அரசாங்க அதிபர்கள் நடவடிக்கை மேற் கொண்டிருந்தனர். இதனை நான் அறிவேன்.

அது அப்படியிருந்த போதிலும் தற்போது கிளிநொச்சிக் கிராம சேவகர் பிரிவில் மக்கள் படும் இன்னல்களை நீக்கு முகமாக இக்கிராம சேவ கர் பிரிவை கிழக்கு' மேற்கு என இரண்டாக வகுத்து இரு கிராம சேவகர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளேன்.

தற்போது கிளிநொச்சி கிராம சேவகராக கடமையாற்றும் திரு. கே. ஜீவரத்தினம் கிளிநொச்சி கிழக்குப் பகுதியையும் திரு. மு. தர்மபாலன் கிளிநொச்சி மேற்குப் பகுதியையும் நிர்வகிப்பார்கள்.

தற்போது கிளிநொச்சி விசேட சேவை உத்தி யோகத்தரான மு. தர்ம பாலன் கிளிநொச்சி மேற்கு பகுதியில் கிராம சேவை அலுவலரது கடமைகளையும் கவனிப் பார்.

கிளிநொச்சி கிழக்கு பகுதி கிராம சேவையா ளரான திரு. கே.ஜீவரத் தினம் இப்பகுதி. கிராம சேவை அலுவலரது கட மைகளுடன் கிழக்கு, மேற்கு பகுதிகளில் வரும் மரண விசாரணை சம் பந்தமான வேலைகளையும் கவனிப்பார்.

இப்படி அரசாங்க அதி பர் கூறினர். (இ-76)

1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17-7-1928 மறைவு: 5-11-1985

சந்தியா வேலன் (லோறன்ஸ்)

அன்பின் திருவுருவாய், பண்பின் உறை விடமாய், வாழ்வின் வழிகாட்டியாய், குடும் பத்தின் குலவிளக்காய் வாழ்ந்த எம் அன் புத் தெய்வம் எம்மைவிட்டுப் பிரிந்து ஒரு வருடமாகின்றது. அவரின் ஆத்ம சாந்திக் காக மன்றாடுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சங்குவத்தை, மயிலிட்டி, காங்கேசன்துறை.

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி வள்ளியம்மை கணபதிப்பிள்ளை (அனலிதிவு)

தோற்றம்: 17-12-1914 மறைவு: 17-10-1985

திதி: 5-11-1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் உறைவிடமாய் வாழ வழிகாட் டிய எம் தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங் கள் மனதை விட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம். உங்கள் பிரிவால் துயருறும்

அன்புக் கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது சங்கத்தின் மீளாய்வு செய்யப்பட்ட யாப்பை அங்கீகரிப்பதற்கான விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 15–ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுக மளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நிகழ்ச்சி நிரல்

1. தேவாரம்
2. புதிய யாப்பை அங்கீகரித்தல்

45, கல்லூரி வீதி, வண்ணார்பண்ணை, 04-11-1986

ந. வித்தியாதரன் செயலாளர்

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை கூறுவிலைகள்

கீழ்க்காணும் வேலைகளுக்கான கூறுவிலைகள்

கீழ்க்காணும் வேலைகளுக்கான கூறுவிலை கள் 14 – 11 – 1986ந் திகதி நண்பகல் 12 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 50/– செலுத்தி கூறுவிலைப்படிவங்களையும் மேலதிக விபரங் களையும் இவ்வலுவல கத்தில் 12 - 11 - 1986 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம். சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குனர் இக்கட்டணத்தை செலுத்த வேண்டியதில்லை.

1. சபைக்குத் தேவையான படிவங்கள், பதிவேடுகள் முதலியன அச்சிட்டு விநி யோகித்தல்.
2. நாரந்தனை, ஊர்காவற்றுறை ஆகிய உப அலுவலகங்களுக்குத் தேவையான 27'/29'அடிமின்கம்பங்கள் காங்கேசன் துறை சீமேந்துத் தொழிற்சாலையி லிருந்து கொண்டுவந்து விநியோகித் தல்.

கே. இராமநாதன்
பிரதிச் செயலாளர்,
மாவட்டச் செயலாளருக்காக,
அபிவிருத்திச் சபை அலவலகம்,
செயலகம்,
யாழ்ப்பாணம்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

● கனடா
● ஜெர்மன்
● இத்தாலி
● ஹொலண்ட்
● பிரான்ஸ்
● அமெரிக்கா
● அவுஸ்திரேலியா

நம்பிக்கை வாய்ந்த பயணம்

உடனடியாக

தாமதமின்றித் தொடர்பு கொள்க.

யாழ்.-கொழும்பு விமான சேவை

பயணிகளுக்கு விசேட சலுகைவசதிகளுடன்

ஒழுங்காக நடைபெறுகிறது

உங்கள் சேவைகளைப் பதிவு செய்க.

தாதிமார்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

5 வருட அனுபவமுள்ள பெண் தாதிமார்கள் எம்முடன் உடன் தொடர்புகொள்ளவும்

எங்கள் சேவைகள்:

* எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
* துரிதமான பாஸ்போர்ட், விசா, மொஸ்கோ ஒழுங்குகள்
* CONFIRMATIONS, RE-CONFIRMATIONS & CANCELLATIONS
* இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

ரெலிபோன் - ரெலெக்ஸ்

முதல் தரமான சேவை

Open 24 Hours

Mack Communications & Travels

இல. 8, முதலாவது ஒழுங்கை, மருத்துவதுறை வீதி, யாழ்ப்பாணம். Tele:- 24791, 24836

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடு களுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத் தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோ ரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போர்ட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள் ளவும்

தொடர்பு:

N.பாலா

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

* தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஒமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப் பட்டுள்ளது.
* எமது கிளை நிறுவனம் ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தி யிலும் நிறுவப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

ஒரு பெண்ணுக்கு அடக்கமே சிறந்த அணிகலன். பெண்கள் வெகு எளிதில் கோபத்துக்கு ஆளாதல் கூடாது.

–அன்னை சாரதாதேவி.

உதயன்
உண்மை – நிதர்சனம் – துணிவு
இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24805, 22073
05-11-1986 த. பெ. இல. 23

புலனற்றோர் நல்வாழ்வு

விழிப்புலன் அற்றவர்கள் புறக்கணிக்கப் படக் கூடாது. சமுதாயத்தில் அவர்களும் சமமான அந்தஸ்துடன் வாழ்வதற்கு மற்ற வர்கள் உதவி செய்ய வேண்டும்.

விழிப்புலன் இல்லாதவர்கள் குறித்து சமூ கத்தில் சரியான எண்ணப்பாடு இல்லை. அத னாலேயே அவர்களின் திறமை வெளிக் கொணரப்படாது முடக்கப்படுகிறது.

அச்சுவேலியில் அண்மையில் நடந்த வெள்ளைப்பிரம்புத் தினக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல் கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

விழிப்புலன் இழந்தவர்கள் என்பதற்காக எங்களில் ஒரு சாராரை நாம் ஒதுக்கி வைப் பது பாவம்.

மனிதனின் உடல் சீராக இயங்கி அவன் முழு மனிதனாக வாழ்வதற்கு ஐம்புலனறிவும் அவசியம் என்பது உண்மையே.

ஆனால் துரதிஷ்டவசமாக அவற்றில் ஒன்று இல்லாதவர்களோ, இழந்தவர் களோ, சமுதாயத்தில் இருந்து தூர வைப் பது பண்பல்ல. அதுவும் ஒருவித சமூகவி ரோதச் செயலே.

விழிப்புலனோ அல்லது செவிப் புலனோ அல்லது பேச்சுப் புலனோ இழந்த ஒருவரை சமுதாய ஒட்டத்தில் இருந்து ஒதுக்கி வைக்க நினைக்கும் எவரும் அதே கதி தமக்கு ஏற்பட்டால் என்னுகும் என்று ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

அவ்வாறு ஒவ்வொருவரும் சிந்திக்கத் தவறிப்பட்டால் புலனற்றவர்கள் அல்லது புலன் இழந்தவர்கள் சமுதாயத்தில் இருந்து புறக்கணிக்கப்படும் நிலை அருகிவிடும். அவர் களது திறமைகள் முடக்கப்பட்டு பாழடிக் கப்படும் நிலையும் மாறிவிடும்.

ஒரு புலன் குறைந்தவர்கள் அல்லது இழந் தவர்கள் வேறு ஒரு புலன் சம்பந்தப்பட்ட துறைகளில் அளவுக்கு அதிகமான திறமை உள்ளவர்களாக இருப்பர். இது இயற்கையின் நியதி.

எனவே புலன்குறைந்தவர்களிடம் உள்ள திறமைகளைத் தக்கவாறு பயன்படுத்துவதற் கான நல்ல செயல் திட்டங்கள் மிக அவசியம்.

அப்படிச் செய்வதன் மூலம் சம்பந்தப் பட்டவர்கள் தாம் வாழ்க்கையில் நலிந்தவர்க ளாக அல்லது சமுதாயத்தில் வேண்டப்படா தவர்களாகத் தம்மைக் குறைத்துப் பார்த்து விரக்தி அடையும் நிலை மாறும். சமுதாயத் துக்கும் பயன் ஏற்படும்.

உலகின் ஏனைய பகுதிகளில் புலனற் றோர்— வலது குறைந்தோர், மற்றவர்களை விட எவ்விதத்திலும் குறைந்தவர்கள் அல்லர் என்று உணரும் விதத்தில் சகல வசதி,வாய்ப் புகளும், சமூக அந்தஸ்தும் அளிக்கப்பட்டுள் ளன.

அத்தகைய ஒரு நிலையை எமது பகுதி யிலும் உண்டாக்க வேண்டும். இது விடயத்தில் இங்குள்ள சமூக நல ஸ்தாபனங்களும், சமூக சேவை இயக்கங்களும் முன்னின்று உழைப்பது அவசியம்.

புலனற்றோரை சரி சமமாக மதிக்கும் பக்குவத்தை ஒவ்வொரு பிரசை மனத்திலும் உண்டாக்குவதிலேயே அதன் வெற்றி தங்கி உள்ளது.

புலனற்றோரை மதித்து, சமத்துவம் கொடுத்து, அவர்களது திறமையை வளர்த்து, அவர்களுக்கு விசேட சலுகைகளை வழங்கி, அவர்களது சமூக அந்தஸ்தை இப்போதிருப்பதை விட உயர்த்தி அவர்களுக்கு நல்வாழ்வு காட்டுவது அவசியம் என்பதை எல்லோரும் உணர்ந்து செயற்படுவோமாக.

அ. தி. மு. கவுக்கு மட்டும் அல்ல எம். ஜி. ஆருக்கே ஆபத்து

ஜெயலலிதாவை நீக்க வேண்டும்

பதவி நீக்கப்பட்ட காளிமுத்து கோருகிறார்

சென்னை, நவ. 4

செல்வி ஜெயலலிதாவை அ. தி. மு. கவின் அடி மட்ட உறுப்பினர் பதவி யில் இருந்தே நீக்க வேண்டும். ஜெயலலிதாவினால் அ. தி. மு. க கட்சிஅதிமுக அரசு ஆகியவற்றுக்கு மட்டுமல்ல எம். ஜி. இராமச் சந்திரனுக்குமே ஆபத்து வரப்போகிறது.

தமிழ் நாடு அமைச்சர்

ஆகாசவாணி முன்னாள் அறிவிப்பாளர் மரணம்

புதுடில்லி, நவ.4

ஆகாசவாணியில் பணி யாற்றி ஒய்வு பெற்ற பெண் அறிவிப்பாளரான செல்வி லக்ஷ்மி பூரணம் தனது புதுடில்லி வீட் டில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இவரின் வயது 58. ஆகாசவாணியின்தமிழ்ப் பிரிவில் அறிவிப்பாளரா கப் பணியாற்றி இருந் தார்.

இவரின் மரணம் குறித்து பொலீஸார் விசாரணை நடத்தி வரு கின்றனர். (இ-எ)

பதவியில் இருந்து விலக் கப்பட்ட திரு. கே. காளி முத்து மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முன்னாள் அமைச்சர் காளிமுத்து சொன்னதாவது;

அமைச்சர் பதவியில் இருந்து நரன் நீக்கப் பட்ட செய்தி அதிர்ச்சி தான் தந்தது.

முதலமைச்சரின் நட வடிக்கை எனக்குப் பதற் றம் தரவில்லை. அமைச் சரவை மாற்றம் குறித்து விவரமாக நான் பேச விரும்பவில்லை.

மத்திய அரசுக்கு எதி ரான இந்தப் போராட் டத்துக்கு நான் ஆதர வளித்ததே பதவி நீக்கத் துக்குக் காரணமாக இருக்கமுடியாது. இந்தி எதிர்ப்பு அண்ணு.தி.மு க. கட்சிக் கொள்கையும் ஆகும்.

கட்சிப்பதவிகளில் ஒன் றை நான்வகிப்பது தர்ம சங்கடமான நிலைமை யையே உருவாக்கும்.

இன்று கட்சிக்குள் நில வும் நெருக்கடிக்கு எல் லாம் முழுக்காரணம் ஜெயலலிதாவே. சாதா ரண உறுப்பினர் பதவி யில் இருந்தே ஜெய லலிதாவை நீக்க வேண் டும்—

இப்படி முன்னாள் அமைச்சர் காளிமுத்து சொன்னார்.

அமைச்சரவை மாற் றத்தில் பதவி இழந்த திரு. ஆர். எம். வீரப்பன், மாற்றம் பற்றிக் கருத்து வெளியிட மறுத்து விட் டார்.

'எல்லாம் நன்மைக் கே' என்று மட்டும் திரு. வீரப்பன் சொன்னார். (இ-ஐ-எ)

வெளி உலகில்

பாகிஸ்தானில் இனமோதல் 44 பேர் பலி! 300 பேர் காயம்!

இஸ்லாமபாத், நவ.4

பாகிஸ்தானில் இன மோதல்களில் உயிரிழந் தோர் எண்ணிக்கை 44 ஆக அதிகரித்தது. 300 பேர்களுக்கு மேல் காயமடைந்தனர்.

கராச்சியிலும் ஹைதர பாத்திலும் உருதுமொழி பேசும் முஹாஜிர் இன மக்களுக்கும் பதன் இன மக்களுக்கும் இடையே தான் இம்மோதல்கள் இடம் பெறுகின்றன.

வன்செயலகள் நடை பெறும் பகுதிகளில் ஊர டங்குச் சட்டம் அமுல் நடத்தப்படுகின்றது.

அதிகரித்து வரும் வன் செயல்கள் குறித்து பாகிஸ்தான் பிரதமர் கான் ஜூனஜோ கவலை தெரிவித்திருக்கிறார்.

சட்டம், ஒழுங்கு நிலைநாட்ட உடனடி நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பிரத மர் வலியுறுத்தி இருக்கி றார். (இ-எ)

நேபாளத்தில் 100 இளைஞர் கைது

காத்மண்டு, நவ.4

நேபாளத்தில் சுமார் 100 இளைஞர்கள் பொலீ ஸாரினால் கைது செய்யப் பட்டனர்.

நேபாள் சமூகத்தின் புத்தாண்டுக் கொண் டாட்டத்தை ஒட்டி கூட் டம் ஒன்றை நடத்த முயற்சித்தசமயமே இந்த இளைஞர்கள் கைது செய் யப்பட்டனர். (இ-எ)

கோழிக் குஞ்சுக்கு வந்த ஆபத்து!

புதுடில்லி, நவ. 4

லஞ்சமாகக் கொடுக்கப்பட்ட கோழிக்குஞ்சு தடயப் பொருளாக நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் இந்தியாவில் ராய்ப்பூர் என்னு மிடத்தில் இடம் பெற்றது.

ராய்ப்பூரில் உள்ள ஆயுள்வேத திணைக்களத் தில் வேலை செய்யும் பியோன் ஒருவருக்கு சேம லாப நிதியில் இருந்து முற்பணம் எடுக்க வேண் டிய தேவை ஏற்பட்டது.

கோழிக்குஞ்சு ஒன்றை லஞ்சமாகத் தரும் படி தலைமைக் குமாஸ்தா நெருக்கவே பியோ னுக்குக் கோபம் வந்தது.

பொலீஸுக்குப் போய் முறையிட்டார். பொலீஸார் வலை விரித்தனர்.

கோழிக்குஞ்சு, குமாஸ்தாவுக்கு கொடுக்கப் பட்ட சமயம் பொலீஸ்ார் அவரைக் கைது செய் தனர்.

உயிருடனுள்ள இந்தக் கோழிக்குஞ்சு நீதிமன் றத்தில் தடயப் பொருளாக தற்போது வைக்கப் பட்டுள்ளது. குமாஸ்தா மீது வழக்கு பதிவு செய் யப்பட்டுள்ளது. (இ-எ)

யுத்தம் மூலமே தீர்வு

மொஸாம்பிக் புதிய ஜனாதிபதி கூறுகிறார்

மொபுடு, நவ. 4

வலதுசாரி கெரிலாக் களுக்கு எதிரான யுத் தம் தொடரும். யுத்தத் தின் மூலமே பிரச்சினைக் குத் தீர்வு காணப்படும்.

இப்படி மொஸாம்பிக் கின் புதிய ஜனாதிபதி ரேஜியானே அறிவித் தார்.

புதிய ஜனாதிபதியாக ஆளும் கட்சியான பெர லிமோ கட்சியின் மத்திய செயற்குழு, வெளி நாட்டு மந்திரியாக 10 ஆண்டுகள் வரை பணி யாற்றிய இவரை ஏகமன தாகத் தெரிவு செய்தது.

47 வயதான இவர், முதல் தடவையாக செய் தியாளர் மத்தியில் பேசு கையில் மொஸாம்பிக் கின் வெளி நாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்படாது. மார்க்ஸீயக் கொள்கைகளையே எனது அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று குறிப்பிட்டார்.

விமான விபத்தில் உயி ரிழந்த ஜனாதிபதி சமோரா மைக்கொலின் இடத்துக்கே இவர் தெரிவு செய்யப்பட்டி ருக்கின்றார். (இ-எ)

35 பயணிகள் உயிரிழப்பு

அங்காரா, நவ. 4

துருக்கியில் வடபகுதி நகரில் பஸ் ஒன்று சிமெந்து ஏற்றி வந்த டிரக்குடன் மோதி கவிழ் ந்ததில் 35 பயணிகள் மரணமானார்கள். 60பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பலர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

உயிரிழந்த பயணிக ளின் பெரும்பாலான சடலங்கள் சிமெந்து பக் கெட்டுக்களின் கீழ் நசுங் கிக் கிடந்தன. (எ

ஞானமொழிபேசும்முகம்

விளக்குவது என்ன?

கந்தஷஷ்டி உரையில் விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 5

ஈசருடன் ஞான மொழி பேசும் முகம் விளக்குவது என்ன? இதற்கு விளக்கம் அளித்தார் வித்துவான் திருமதி வசந்தா வைத் தியநாதன்.

நல்லை ஆதீனத்தில் இடம்பெறும் கந்த சஷ்டி விழாவில் கடந்த திங்கள் 'ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்று' என்ற தலைப்பில் வித்துவான் திருமதி வசந்தா வைத் திய நாதன் உரையாற்றி னர்;

அவர் சொன்னதா வது;

மயில் பிரணவ ஸ்வரூ பம். அதன் காலில் கிடக்கும் பாம்பு குண்ட லினி சக்தி.

திருமாலுக்கு அணி யாகவும், சிவனுக்கு அணியாகவும் உமைக்கு ஆழியாகவும், விநாயக ருக்கு உதரபந்தனமாக வும் திகழும்பாம்பு,முருக வழிபாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகின் றது.

பிராணவாயுவை அடக்கி ஓங்காரத்தை உச்சரித்தால் குண்ட லினி சக்தி விழித்து ஆறு ஆதாரங்களின் வழியாக சஹஸ்ராரத்தைச் சென்றடைந்து முக்திக் கதவைத் திறக்கின்றது.

பிராணயாமத்தால் யோக சாதனை நிகழ்கின் றது. முருகன் யோகஸ் வரூபம். அதனால் அவ ரைப் பாம்புடன் சேர் த்தே வழிபடுகின்றோம்.

தெலுங்கு தேசமாகிய ஆந்திர நாட்டிலே பாம்பை "சுப்பராயுடு" என்றே அழைப்பார் கள். இன்றும் "சுப்ர மண்யா" என்ற தலத் தில் புற்று வழிபாடே சிறந்திருக்கிறது.

"நான் என்ற அகந்தை கொண்ட நான் முக னிடம் அநாஹத ஒலி யான பிரணவத்தின் பொருள் கூறுமாறு கேட்டு அவன் தருக்கை அழித்து, ஈசனுக்கு உப தேசிக்கு மாறுபோல உலக மக்களுக்கு உண் மைப் பொருளை உணர்த் திய கந்தப் பெருமானைக் கருத்திலே கொண்டால் "நான்" "எனது" என்ற அகங்கார மமகார மற்று போன்பம் உறுவர் என்ற தத்துவத்தின் உள்ளொளியே ஈசருடன் ஞானமொழி பேசுமுகத் தினுல் விளக்கப்படுகின் றது.

-இப்படி வித்துவான் திருமதி வசந்தா வைத் திய நாதன் தெரிவித் தார். (இ-எ)

திருமலையில் அகதிகள் திடீர் இடமாற்றம்

திருகோணமலை, நவ 5

திருகோணமலை நகரில் மூன்று பாடசாலைகளில் தங்கியிருந்த தமிழ் அக திகள் கடற்படைக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றுக்கு திடீரென்று இடமாற்றம் செய்யப் பட்டனர்.

திருகோணமலை தொலைத் தொடர்பு திணைக்களம் குண்டு வைத்து சேதப்படுத்தப் பட்டதைத்தொடர்ந்தே அகதிகள் முகாம்கள் இட மாற்றம் செய்யப்பட் டன.

போராளிகள் அகதி முகாம்களில் தங்கி யிருந்து கொண்டு தான் இத் தாக்குதலை நடத்தி யதாக பாதுகாப்பு வட் டாரங்கள் சந்தேகிக்கின் றன.

அதைத் தொடர்ந்தே அகதி முகாம்கள் இடம் மாற்றம் செய்யப்பட் டன. (எ-21)

தவழ்ந்து, தவழ்ந்து வந்த சிப்பாய்கள் மீது புலிகள் தாக்குதல்

வல்வெட்டித்துறை, நவ. 5

தவழ்ந்து தவழ்ந்து வெளியேவர முற்பட்ட சிப்பாய்களை நோக்கி புலிகள் தாக்குதல் நடத் தினர்.

வல்வெட்டித்துறையில் ஞாயிற்றுக்கிழமை இச் சம்பவம் நடந்தது.

ஞாயிற்றுக்கிழமை இரவு 8. 30 மணியள வில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து ஆதிகோவிலடிப் பக்கமாக பொதுமக்க ளின் வீடுகளுக்குள்ளால் மறைந்து தவழ்ந்து தவழ்ந்து சிப்பாய்கள் வெளியேற முற்பட்ட னர். காவலுக்கு நின்ற விடுதலைப் புலிகள் சிப் பாய்கள் மீது சராமாரி யான துப்பாக்கி வேட் டுக்களைத் தீர்த்தனர்; இதனை அடுத்து சிப்பாய் கள் முகாமுக்கு திரும் பிச் சென்றனர்.

புலிகளின் தாக்குதலி னுல் சிப்பாய்கள் தரப் பில் சிலர் காயமடைந் திருக்கலாம் என நம்பப் படுகிறது. (இ-160)

சிலை சிந்திதிகளில்

கந்தசுவாமி கோயிலில்

நீர்வேலி, நவ. 5

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் கந்த ஷஷ்டி உற்சவம் கடந்த ஞா யிற் றுக் கிழமை ஆரம்பமாகி 7ஆம்திகதி வெள்ளிக்கிழமை சூரசம் ஹாரமும், 8ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்த உற் சவமும், 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக் கல்யாண உற்சவமும் சிறப்பாக நடைபெற வுள்ளன. (இ-110)

எண்மர்மட்டும் விசாரணையில்

கொழும்பு, நவ. 5

கடந்த வெள்ளி இரவு கொழும்பு மாநகரில் நடந்த தேடுதலில் கைது செய்யப்பட்டவர்களில் எண்மரைத் தவிர ஏனை யோர் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

இந்த எண்மரில் அதிக மானோர் சிங்களவர்கள். அவர்களில் ஒருவர் களனிப் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த ஒரு பெண் விரிவுரையாளர்.

தென் இலங்கைத் தீவிரவாத இயக்கத் துடன் இவருக்கு தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. (இ-ஐ-எ)

கால்நடைகளுக்கு நோய் வரும்முன் தடுப்பூசி

வேலணை, நவ. 5

வேலணை உதவி அர சாங்க அதிபர் பிரிவிலே கால்நடை வளர்ப்போர் சங்கம் உதயமாகுவதை யிட்டு நான் மகிழ்ச்சி யடைகின்றேன். வெள் ளம் வரும்முன் அணை கட்டுதல் வேண்டும். வெள்ளம் வந்த பின் அணைகட்டி பலன் இல்லை. அதுபோல கால்நடை களுக்கு நோய் வரும் முன் தடுப்பூசி களைப் போட்டு நோயைத் தடுக்க வேண்டும்.

வேலணை அபிவிருத்தி சபை உப அலுவலகத் தில் கால் நடை வளர்ப் போர் சங்க அங்குரார்ப் பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து பேசிய மிருக வைத்தியர் செ. மாணிக்கவடிவேல் மேற் கண்டவாறு குறிப்பிட் டார்.

மிருக வைத்தியர் தொடர்ந்து உரை யாற்றுகையில், கால் நடைகளுக்கு தேவை யான உணவு வகை களான வைக்கோல், தவிடு போன்றனவற்றை சேமித்து இச் சங்கங்கள் மூலம் வழங்கினுல் மக் கள் அதிக நன்மை பெறு வார்கள் என்றார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திர சேகரம் தமது உரையில், தற்பொழுதுள்ள கஷ்ட மான சூழ்நிலையிலும் இங்கு கால்நடை வளர்ப் போர் சங்கம் ஒன்று உதயமாகுவதையிட்டு நான் மட்டில்லாமகிழ்ச்சி யடைகின்றேன்.

தீவுப் பகுதியிலே எவ ரும் மேற்கொள்ளப் படாத முறையிலே இச் சங்கத்தை அமைக்க முன் வந்தவர்களை நான் பாராட்டுகின்றேன் என்றார்.

கூட்டத்தில் மிருக வைத்திய வழிநடத்து னர் திரு. எஸ். யேசு தாசன், மாதர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி. தி. பத் மாவதி, இளைப்பாறிய அதிபர் திரு. சோ. கந் தையா, திரு. அ. பொன் னுத்துரை ஆகியோர் கருத்துரை வழங்கினர். (இ-167)

பொய்யாமொழி

குறள்:

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு.

பொருள்:

(புறத்திலுள்ள இருளை நீக்கும்) விளக்குகள் (எல்லாம் விளக்குகள் அல்ல; சான்றோர்க்கு அகத்திலுள்ள இருளை நீக்கும்) பொய்யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கந்தஷஷ்டி நான்காம் நாள் இன்று

சூரனின் பெருவாழ்வு

ஆசையின் மிக்குழன்று அளவிலா
அல்லல் செய்த
சூரனை மாய்க்கத் தேவர் துதித்தனர்
உயிர்கட்கெல்லாம்
தாதை தன் கண்ணில் வந்த அழற்பொறி
கந்தனுகி வீறுடன் அமர்க்களத்தே
வீர வேல் விளங்கதின்றுன்
மாயையின் மிக்கோனை
மாயையின் மைந்தன் மானம்
தாள் பணிந்துய்யத் தடுத்தது
அதனுல் அண்ணல்
திமையின் உருவம் தன்னை
சேவலும் மயிலுமாக்கி
வாழ்வளித்தாண்டு கொண்டான்
வரம்பிலாக் கருணைவள்ளல்.

-பரமேஸ்வரி சிவராமலிங்கம்.

அம்பிலாந்துறையில்

ஹெலிதாக்குதலில் பெண் உட்பட இருவர் மரணம்

மட்டக்களப்பு நவ5

அம்பிலாந்துறையில் ஹெலிக்கொப்டர்தாக்குதலில் ஒரு பெண்உட்பட 2 பேர்உயிரிழந்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிறு இடம் பெற்றது. இறந்த பெண்ணின் பெயர் தெரியவில்லை. மற்றவர் ஆண். 40 வயதான சோமசுந்தரம் என்று அவர் அடையாளங் காணப்பட்டார்.

தேற்றுத்தீவில் இருந்து சைக்கிளில் மகனுடன் வந்து கொண்டிருந்த போதே இவர் ஹெலிக் கொப்டர் தாக்குதலில் உயிரிழந்தார். மகன் தப்பிவிட்டார். (இ-எ-21)

ஆஸ்பத்திரி அலுவல்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.5

யாழ்- ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் தொடக்கம் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளே நடைபெறுகின்றன.

சகல கிளினிக்குகளும் முடப்பட்டுள்ளன.

அவசர, விபத்து சம்பந்தமான நோயாளர்களுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்பட்டது.

மருத்துவ பீட மாணவர்களுக்கான போதனை வகுப்புகளும் நிறுத்தப் பட்டுள்ளன.

இதேவேளை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கென மிகக் குறைந்த அளவு நோயாளர்களே வருகின்றனர். (இ-10)

திருமலை தொலைத்தொடர்பு திணைக்கள அதிகாரி கைது

திருகோணமலை, நவ. 5

திருகோணமலை தொலைத் தொடர்புத் திணைக்களம் அண்மையில் குண்டு வைத்துச் சேதப்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக திணைக்கள அதிகாரியான ஜனுப் நூர்டீன் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

இது பற்றிக் கூறப்படுவதாவது;

திணைக்கள அலுவலகத்தின் நிறப்பு ஜனுப் நூர்டீனிடம் இருந்தாம்.

சிறுடையில் சென்ற ஒரு கோஷ்டி, "கந்தோருக்குள் குண்டு வைக்கப் பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது; நிறப்பைத் தாருங்கள்" என்று கேட்டுத் நிறப்பை வாங்கிக் கொண்டு சென்றதாம்.

அதன் பின்னரே திணைக்களம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. (இ-எ-21)

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

இந்துவில் 118மாணவர் அனுமதி பெறத் தகுதி

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ் இந்துக் கல்லூரியில் இம் முறை 118 பேர் பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதியுடையவர்கள் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் வெளிவந்த க. பொ. த. உயர் தர பரீட்சை முடிவுகளின் படியே 118 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் 75 மாணவரும், உயிரியல் பிரிவில் 34 மாணவரும் வர்த்தகப் பிரிவில் 9 மாணவரும் தகுதி பெற்றுள்ளனர்.

உயிரியல் பிரிவு மாணவர்கள் ரி. சத்திய சீலன் 4 பாடங்களில் அதிவிஷேட சித்தியும் பி. லக்ஸ்மன் 3 பாடங்களில்

(4-ம் பக்கம் பார்க்க)

அன்புடன் அழைக்கின்றது!

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

* தரமான வர்ண நிழற்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்

பெற்றுக்கொள்ளலாம்.

உதயன்

05 - 11 - 1986 புதன்கிழமை

* Processing Free
* விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 23628

விழிப்புலனற்றோர் இலவச பஸ் பிரயாணம்

யாழ்ப்பாணம், நவ. 5

விழிப்புலனற்றோர் இலவச பஸ் பிரயாணம் செய்ய அனுமதிப்பது என்று அச்சுவேலி தனியார்மினிபஸ்சங்கம் தீர்மானித்துள்ளது.

இதேபோல் மற்றையமினிபஸ் சங்கங்களும் கேட்டுக்கொள்வது என்றும் அச்சுவேலி மினிபஸ் சங்கத் தலைவர் திரு. மதனசேகரம் தெரிவித்தார்.

அச்சுவேலி லயன்ஸ் கழகத்தால் நடத்தப்பட்ட வெளிநோய்பிரம்பு தினவிழாவிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5)

அகதிகள் படகுகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்ஜின்கள் சேதமடைந்தன.

துப்பாக்கிப்பிரயோகத்தின்போது நாம் இரண்டு கைகளையும் மேலே தூக்கியவண்ணம் அழுகுரல் எழுப்பினோம்- துப்பாக்கிப் பிரயோகத்தில் கம்பர்மலையைச் சேர்ந்த 21 வயது நிரம்பிய தா, ஸ்ரீ என்பவர் உயிரிழந்தார்.

அதன் பின்னர் துப்பாக்கிப்பிரயோகம் நிறுத்தப்பட்டு தள்ளாடி இராணுவமுகாமில் நாம் ஒப்படைக்கப்பட்டோம்.

விசாரணையின் பின்னர் நாம் அனைவரும் விடுவிக்கப்பட்டோம். படகுகளின் என்ஜின்கள் யாவும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன

பெண்களைத் தவிர

யாழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகும்.

எல்லா வகையான கோரிக்கைகளையும் ஆராய்ந்தோம். கோட்டையில் இருந்து இராணுவ முகாமை அகற்றுவது நடைமுறை சாத்தியமுள்ள விடயமல்ல. எனவேதான் சண்டைத் தவிர்ப்புப் பிரதேசப் பிரகடனத்தை ஆலோசிக்கிறோம்.

அதனை எப்படி அமுலாக்கலாம், அதனை அமுல் செய்வதை யார் கண்காணிக்கலாம் என்பதுபற்றி எல்லாம் ஆராய வேண்டியுள்ளது.

இங்குள்ள நிலைமையையும், டாக்டர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளையும் நாட்டில் உள்ள வைத்தியர்களுக்கு எடுத்துக் கூறுவோம்.

— இவ்வாறு டாக்டர் மு அல்விஸ் வாக்குறுதி அளித்தார். (இ-9)

அரசிடம் அகிம்சை வழி போராட்டம் பலன் தரவில்லை

டாக்டர் சிவகுமார் உரை

யாழ்ப்பாணம் நவ. 5

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் சாதி, மத, இன வேறுபாடின்றி, போராளிகள், ஏப்பாய்கள் என்ற வித்தியாசம் இன்றி நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கு கிறார்கள்.

யாழ் போதனா வைத்தியசாலையில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழுவினர் கலந்துகொண்ட கூட்டத்தில் தலைமையுரை ஆற்றியபோது டாக்டர். ச. சிவகுமார் இவ்வாறு குறிப்பிட்டார்.

டாக்டர் சிவகுமார் தொடர்ந்து கூறியதாவது:-

போராளிகள் குழுவினர் ஆஸ்பத்திரியினுள் தமக்குள் மோதிக் கொண்டபோது அதனைக் கண்டித்து நாம் வேலை நிறுத்தஞ் செய்தோம்.

அகிம்சை வழி வென்றது

பின்னர், ஆஸ்பத்திரிக்குள் ஆயுதங்களுடன் பிரவேசிக்க மாட்டோம் என்று அவர்கள் வாக்குறுதி தந்தார்கள். அவ் வாக்குறுதியை அவர்கள் இன்றுவரை காப்பாற்றிவருகிறார்கள்.

பின்னர் ஒரு தடவை ஒரு டாக்டரின் கார் களவாடப்பட்டபோது அதைக் கண்டித்தும் வேலை நிறுத்தஞ் செய்தோம். அந்தக் கார் திருப்பித் தரப்பட்டது. எனவே போராளிகள் முன் அகிம்சை வழி வென்று உள்ளது,

ஆனால் அரசின் கண்களில் எமது சனநாயக ரீதியான சாத்வீக நடவடிக்கைகள் பெரிதாகத் தெரிவதில்லை; பலனும் தருவதாக இல்லை.

ஷெல் தாக்குதல்கள் தொடர்பாக நாம் மகஜர்கள் அனுப்பி, பேச்சுவார்த்தை நடத்தி, வேலை நிறுத்தஞ் செய்தும் அரசு எவ்விதத்திலும் செவி சாய்ப்பதாய் இல்லை.

யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து கோட்டை இராணுவ முகாம் மீது என்றேனும் தாக்குதல் நடத்தப்பட்டதில்லை என்ற எமது கூற்றை அரசு நம்பவேண்டும்.

அரசு பொதுசனத் தொடர்புச் சாதனம் ஊடாக விடுத்த தனது கூற்றை வாபஸ் பெற வேண்டும்.

இவ்வாறு டாக்டர் ச. சிவகுமார் குறிப்பிட்டார்.

ஆண்டின் நல்ல ஜோக்

அடுத்துப் பேசிய சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். கிருஷ்ணராசா (பின்வருமாறு குறிப்பிட்டார்:-

அரசாங்கம் கோட்டையில் இருந்து இராணுவத்தை வாபஸ்பெற வேண்டும். இராணுவம் பொது மக்களைக் காப்பாற்றுவதற்காக கோட்டையில் இருக்கிறது என்பது இவ்வாண்டின் சிறந்த ஜோக்-என்றார்.

தூதுக்குழுவில் இடம் பெற்ற டாகடர் ஸ்ரான்மோர் மு அல்விஸ், டாக்டர் எஸ். ரத்னப்பிரியா, டாக்டர் எஸ். பியசிறி ஆகியோரும் உரையாற்றினர்கள். (அ-9)

தூதுக்குழுவினர் சேதங்களை பார்வையிட்டனர்

சுலோக அட்டைகளுடன் மருத்துவத்துறை மாணவர்

யாழ்ப்பாணம் நவ. 5

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் ஷெல் தாக்குதல்களால் வினைந்த சேதங்களை நேரில் கண்டறிய அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தூதுக் குழு நேற்றுக் காலை 11 மணி அளவில் வந்தது. குழுவினர் ஆஸ்பத்திரியில் சேதம் அடைந்த கட்டடங்களை பார்வையிட்டனர்-

இக்குழுவில் சங்கத் தலைவர் டாக்டர் ஸ்ரான்மோர் மு அல்விஸ், செயலாளர் டாக்டர் எஸ். ரத்னப்பிரியா, செயற்குழு உறுப்பினர் டாக்டர். எஸ் பியசிறி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய இவர்களை வைத்திய சாலை அத்தியட்சகர் திரு. எஸ். நச்சினார்க்கினியன் டாக்டர் ச. சிவகுமார் ஆகியோர் நேரில் சென்று அழைத்து வந்தனர்.

இவர்கள் ஆஸ்பத்திரி வாயிலில் நுழையும் போது யாழ் பல்கலைக் கழக மருத்துவத்துறை மாணவ, மாணவிகள் மழையையும் பொருட்படுத்தாது சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் நின்று தமது நிலைப் பாட்டை விளக்கினர்கள்.

தூதுக்குழுவினர் ஆஸ்பத்திரியில் உள்ள சகல பகுதிகளுக்கும் சென்று பாதிக்கப்பட்ட இடங்களையும் வீழ்ந்த ஷெல்லின் பாகங்களையும் நேரில் பார்த்தனர்.

காயமடைந்து சிகிச்சை பெறும் நோயாளர்களையும் பார்த்துப் பேசி ஆறுதல் கூறினர்கள்.

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் சிங்களப் பெண்மணி மேரியின் காயங்களை இக் குழுவினர் பார்த்தனர்.

தான் சிங்களப் பெண் என்றும் தனது கணவர் தமிழர் என்றும், தன்னை ஏப்பாய்கள் சுட்டதனால் காயம் விளைந்தது என்றும் அவர் குழுவினருக்கு விளக்கினார்.

சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ள சிங்கள முதியவர் பியதாசாவுடனும் அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

தான் காலியைச் சார்ந்தவரென்றும், கொழும்பு பெரியாஸ்பத்திரியில் கிடைத்த சிகிச்சை திருப்தி அளிக்காத காரணத்தால் இங்கு வந்த தாகவும் அவர் கூறினார்.

தமிழ் மக்கள் மத்தியில் இப்படிப் பிரச்சினையான காலத்தில் யாழ்ப் பாணத்தில் வாழப் பயமில்லையா? என்று குழுவினர் கேட்டனர்.

அவர்கள் நல்லவர்கள், அன்பாகப் பராமரிக்கிறார்கள், நல்ல சிகிச்சை அளிக்கிறார்கள் என்று சிங்கள முதியவர் விளக்கினர்.

பாதிக்கப்பட்ட வார்டுகளைப் பார்த்த குழுவினர் ''இப்படியும் இவர்கள் சுட்டுத் தள்ளினார்களே'' என்று அதிர்ச்சி அடைந்தனர். (இ - 9)

கோட்டை அதிகாரிகள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டை முகாம் சென்று மேஜர் ஆரியதிலகவுடன் பேச்சுக்கள் நடத்தியது.

குமார் ஒரு மணித்தியாலம் நீடித்த இச்சந்திப்பின் பின்னர் சங்கத் தூதுக்குழு மீண்டும் யாழ் ஆஸ்பத்திரிக்குத் திரும்பியது.

இச்சந்திப்புக் குறித்து தகவல் தருகையிலே டாக்டர் ரத்னப்பிரியா மேற்கண்டவிதமாகச் சொன்னார்.

சண்டைதவிர்ப்புப் பிரதேசத்தைக் கடைப்பிடிக்க சுயேச்சையான கண்காணிப்புக்குழு ஒன்றை நியமிப்பது பற்றியும் இராணுவ அதிகாரியுடன் பேசினீர்களா? என்று கேட்டபோது; அது பற்றி நாம் பேசவில்லை. கொழும்பில் வேறு மட்டத்தில் அதாவது உயர்மட்டத்தில் தான் இதனைப் பேசுவோம் என்று டாக்டர் ரத்னப்பிரியா சொன்னார்.

யாழ் ஆஸ்பத்திரி டாக்டர்கள் தெரிவித்த கருத்துக்கள், எம் அபிப்பிராயங்கள் ஆகியவற்றையும் நாம் இராணுவ அதிகாரியிடம் சொன்னோம் என்றும் டாக்டர் ரத்னப்பிரியா தெரிவித்தார். அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தூதுக்குழு இன்று கொழும்பு திரும்பும். (அ - ஏ)

குடாநாட்டில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது போல் கடை அடைப்போ, போக்குவரத்து தடையோ, மின்சாரத் தடையோ இருக்கமாட்டாது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் மத்திய கல்லூரி மாணவர்கள் தொடர்ந்தும் வகுப்புக்களை பகிஷ்கரித்து வருகின்றனர். (இ - 10)

அரசு---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

போராளி அமைப்புக்கள் முற்றுக நிராகரிக்கவில்லை. அந்த யோசனைகளில் செய்யப்பட வேண்டிய மாற்றங்களை எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளனர்''— என்றும் திரு. டிக்விற் ஜுனதிபதியிடம் தெரிவித்தார்.

அரசின் யோசனைகளுக்கு தெரிவிக்கப்படும் மாற்றங்கள் குறித்து ஆராய இலங்கை அரசு தயாராக இருப்பதாக ஜனதிபதி திரு. ஜெயவர்த்தனா திரு டிக்விற் டம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் மினி முகாம்கள் ராணுவ தொடர்வண்டிகள்மீது தாக்குதல்

ஈ- பி. ஆர். எல்- எவ்- அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 5

மட்டக்களப்பில் மினி முகாம்கள் மீதும், இராணுவத் தொடர் வண்டிகள் மீதும் மக்கள் விடுதலைப் படை தாக்குதல் களை நடத்தியது.

ஈ. பி. ஆர். எல் எவ். நேற்று இது தொடர்பாக விடுத்த அறிக்கை வருமாறு:-

மட்டுநகர் இ.போ. ச பஸ் டிப்போவுக்கு அருகாமையில் 31- 10 - 86 பிற்பகல 4.30 மணியளவில் சென்றுகொண்டிருந்த இஸ்ரேல் தயாரிப்பு கவசவாகனத் தொடர் வண்டிமீது எமது மக்கள் விடுதலைப்படை 'கோன் சார்ஜ்' வெடிக்கச் செய்து உக்கிரமாகத் தாக்கியதில் 4 இராணுவத்தினர் அதே இடத்தில் மாண்டனர், 4 பேர் காயம் அடைந்தனர்.

இத்தாக்குதலின்போது எதிரிப்படையினரிடமிருந்து எம்மால் துப்பாக்கி ரவைக்கூடுகள், வாக்கி டோக்கி, இராணுவத்தின் உணவுப்பொட்டலங்கள், ஹெல்மெட்டுகள் கைப்பற்றப்பட்டன.

இதற்கு மறுநாள் 1- 11- 86 பிற்பகல் 3.30 மணியளவில் கரடியனாறு முகாமில் இருந்து உன்னிச்சை நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவத்தொடர்வண்டிமீதும் 'கோன்சார்ஜ்' தாக்குதல்மேற்கொண்டபோது ஒரு ஜீப் முற்றாக சேதப்படுத்தப்பட்டது.

இதில் சென்ற அனைத்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். மேலும் இன்னுமோர் 'டிரக்' பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டது. தொடர்ந்து இராணுவத்தினருடன் எமது தோழர்கள் நடத்திய நேரடிச் சமரில் 5 இராணுவத்தினர் மாண்டனர், 13க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலின்போது இராணுவத்தினரிடமிருந்து துப்பாக்கி ரவைகள், இராணுவக் கூடாரங்கள், ஹெல்மெட்டுகள் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலுக்கு உதவியாக கரடியனாறு முகாமிலிருந்து 100-க்கு மேற்பட்ட இராணுவத்தினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்து அருகிலுள்ள கட்டடம் ஒன்றினுள் நுழைந்து மினி முகாம் இட்டனர்.

இந்த மினி முகாம் மீது பிற்பகல் 7-30 மணி அளவில் எமது மக்கள் விடுதலைப்படை வீரர்கள் கலி-30, எஸ். எஸ் 85, நவினரக 60 எம். எம். மோட்டார் போன்றவற்றால் உக்கிரமாகத் தாக்கினர்.

இத் தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமுற்றனர். கட்டடம் முற்று முழுதாக தகர்க்கப்பட்டதால் இராணுவத்தினர் இறந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் தூக்கிக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஓடினர்.

இத் தாக்குதலில் இராணுவ வசம் இருந்த கிறனேட்டுகள் பல கைப்பற்றப்பட்டன.

தாக்குதலின்போது எமது தோழர்கள் மூவர் காயத்திற்குள்ளானார்கள்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கடந்த கால வினைத்தாள்கள்

இன்றும் கையளிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 5

வன்செயலினால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு உதவுமுகமாக ஜீ.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சையின் கடந்த கால வினாத்தாள்களைச் சேகரித்து உதவ யாழ் பரியோவான் கல்லூரி இன்டராக்ட் கழக மாணவர், உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றனர்.

சேகரிக்கப்பட்டவினாத்தாள்கள் தகுந்த முறையில் பங்கீடு செய்யப்படுவதற்காக யாழ் செயலகத்தில் வைத்து அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வினாத்தாள்களைப்பெற விரும்பும் அகதிகளான மாணவர் தங்கள் விண்ணப்பங்களை இன்று 5 ஆம் திகதி உதவி திட்டமிடல் பணிப்பாளரிடம் நேரிலும் கையளிக்கலாம்.

அத்துடன் இவ்வினாத்தாள்களைப் பெற விரும்பும் பாடசாலை அதிபர்கள், வெளி மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்து தமது பாடசாலைகளில் படிக்கும் ஜீ.சி.ஈ. சாதாரண வகுப்பு மாணவரின் விவரங்களுடன் உதவிதிட்ட மிடல் பணிப்பாளருடன் இம்மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டால் இவ்வினாத்தாள்களைப் பெறக் கூடியதாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

இன்றைய ஆட்டம்

நாளை நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 5

குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு மாணவர் முன்னணி நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்றுநடை பெறமாட்டா.

இன்று நடைபெற இருந்த இரு போட்டிகளும் நாளை 6ஆம் திகதி சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும்.

3 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் சென் பற்றிக்ஸ் -- கொக்குவில் இந்து அணிகளும் 4 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது போட்டியில் சென்ஜோன்ஸ் — மகாஜனஅணிகளும் மோதும். (இ)

ஆதரவு

யாழ்ப்பாணம், நவ. 5

யாழ் மத்திய கல்லூரி மாணவர் தலைவன் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து மாணவர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஈழ மாணவர் பொது மன்றமும் இளைஞர் மாணவர் பொதுச் சங்கமும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன. (இ-10)

இரவு---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னர். முஸ்லிம் பகுதியில் உள்ள பஜார் வீதியில் வீழ்ந்து வெடித்த ஷெல் காரணமாக மொச்சாமி என்பவரது வீட்டுமதில் பலத்த சேதமடைந்தது.

ஏ. என். எம். பாறூக் என்பவரது கடையும் இத்தாக்குதலினால் சேதமடைந்துள்ளது. (அ -10)

இந்துவில்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அதிவிஷேட சித்தியும் ஒரு பாடத்தில் விஷேட சித்தியும் பெற்றுள்ளனர்

மேலும் இரு மாணவர்கள் 2 அதி விஷேட சித்திகளும் 2 விஷேட சித்திகளும் பெற்றுள்ளனர்.

கணிதப் பிரிவில் 9 மாணவர்கள் இரண்டுக்கும் அதிகமான அதி விஷேட சித்தி பெற்றுள்ளனர். (உ-5)

பாடசாலை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வடையும்.

முஸ்லிம் பாடசாலை

முஸ்லிம் பாடசாலைகளுக்கான முதலாம் தவணை 5- 1- 87 இல் ஆரம்பமாகி 29-4-87 இல் முடிவடையும்.

இரண்டாம் தவணை 8- 6- 87 இல் ஆரம்பமாகி 24- 7- 87இல் முடிவடையும்.

மூன்றும் தவணை 20- 8- 87 இல் ஆரம்பமாகி 3- 12- 87 இல் முடிவடையும். (இ-எ)

நீதிதார் பட்டியல்

சின்னத்துரை இராசேந்திரம்

(இராசா)

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சின்னத்துரை இராசேந்திரம் (இளைப்பாறிய கொழும்பு மாநகரசபை தொழில் நுட்ப உத்தியோகத்தர்) சங்கரத்தையில் காலமாகிவிட்டார். இவர் காலஞ் சென்ற சின்னத்துரை, திருமதி சின்னத்துரை அன்னலட்சுமியின் அன்பு மகனும், தங்கவதியின் அன்புக்கணவரும், சுபஞ, சுலோச்சனு, சுகந்தன் (யாழ்ப்பாணக் கல்லூரி வட்.) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன் (தொழில் நுட்பவியலாளர்), புவனேந்திரன் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நல்லூர்), தவனேந்திரம், ஞானேந்திரம் (ஜேர்மனி), திருமதி செல்வராணி பொன்னம்பலம் (ஆசிரியை கோண்டாவில்), திருமதி தருமராணி தருமலிங்கம், செல்வி ஜெயராணி (ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கரத்தை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒவசியர், காலஞ் சென்ற தங்காசாச, திருமதி தங்கராசாவின் மருமகனும், சுந்தரலிங்கத்தின் சகலனும், இராஜவதியின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும்.

கேள்விப்பத்திரம்

பழைய பத்திரிகைகள் விற்பனைக்கு உள்ளன. கேள்விப்பத்திரங்களை 10 - 11 - 86 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

விளம்பர எண் — 37
மே/பா. உதயன்
த. பெ. எண்: 23,
யாழ்ப்பாணம்.

அறிவித்தல்

யாழ்/ கன்ஞதிட்டி வீதியில் உள்ள 124, 126 இலக்கம் கொண்ட கடைகளும் அதைச் சார்ந்த பிறபகுதிகளும் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வாதராசப் பெருமாள் தேவஸ்தானத்துக்கு உரிமையானவை. இந்த ஸ்தாபனங்களை தேவஸ்தானத்தின் அனுமதியின்றி வேறு எவரும் கையேற்பதோ அல்லது குடியிருப்பதோ சட்ட விரோதமானதென்பதை அறியத்தருகின்றேன்.

ந. செல்லப்பா
அறங்காவலர்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 — ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 05 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Privte) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 No 86

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org